**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14.07.2026

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## பட்டயப்படிப்பு மாணவர் சேர்க்கை 2026–2027

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் ஆகிய பிரிவுகளில் பட்டயப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இவற்றில் அரசு கல்லூரிகளில் 600 இடங்களும் மற்றும் தனியார் இணைப்பு கல்லூரிகளில் 640 இடங்களும் நிரப்பப்பட உள்ளன. இந்த கல்லூரிகள் மற்றும் இடஒதுக்கீடு விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக உறுப்புக் கல்வி நிலையங்களில் இடஒதுக்கீடு

| வ. எண். | பட்டயப் படிப்புகள் | கல்வி நிலையங்கள் | மொத்த இடஒதுக்கீடு (நிர்ணயிக்கப்பட்டது) |
|---|---|---|---|
| 1. | வேளாண்மை | வேளாண் கல்வி நிலையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர். | 250 |
| 2. | வேளாண்மை (தமிழ் வழி) | வேளாண் கல்வி நிறுவனம், தேசிய பயறு ஆராய்ச்சி நிலையம், வம்பன் | 80 |
| 3. | தோட்டக்கலை | தோட்டக்கலை கல்வி நிலையம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை | 80 |
| 4. | வேளாண்மை பொறியியல் | வேளாண்மை பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுளூர் | 40 |

| | | | |
|---|---|---|---|
| 5. | தோட்டக்கலை | தமிழ்நாடு தோட்டக்கலை மேலாண்மை நிறுவனம், மாதவரம். | 50 |
| 6. | தோட்டக்கலை | தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், தளி | 50 |
| 7. | தோட்டக்கலை | காய்கறி மகத்துவ மையம், ரெட்டியார்சத்திரம், திண்டுக்கல் | 50 |
| | | **மொத்தம்** | 600 |

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக இணைப்பு (தனியார்) நிலையங்களில் இடஒதுக்கீடு**

| வ. எண் | பட்டயப்படிப்புகள் | மொத்த இடஒதுக்கீடு (நிர்ணயிக்கப்பட்டது) |
|---|---|---|
| 1. | வேளாண்மை பட்டயப்படிப்பு | 470 |
| 2. | தோட்டக்கலை பட்டயப்படிப்பு | 170 |
| | | **640** |

இந்த பட்டயப்படிப்புகளின் சேர்க்கைக்கான நேரடி கலந்தாய்வு 14.07.2026 மற்றும் 15.07.2026 ஆகிய இரண்டு நாட்கள் கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா அரங்கத்தில் நடைபெற்று வருகின்றது.

முதல் நாளன்று நடைபெற்ற கலந்தாய்வில் கலந்த கொள்ளாத மாணவர்கள் இரண்டாம் நாளான 15.07.2026 அன்றும் கலந்து கொள்ளலாம். கலந்தாய்விற்கு அழைக்கப்பட்ட மாணவர்களின் விவரங்கள் http://tnau.ucanapply.com என்ற சேர்க்கைக்கான இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மாணவர்கள் தங்களின் கலந்தாய்வு நேரத்தினை அறிந்துக் கொள்ள இணையதளத்தில் உள்ள பட்டியலை சரிபார்க்கவும்.

**மேலும் விவரங்களுக்கு**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்.**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்வி பாடங்களுக்கான விவரங்களை 9488635077, 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் மின்னஞ்சல் (email) : ugadmissions@tnau.ac.in மூலமாகவும் வாரநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தொடர்புகொள்ளலாம்.

***மக்கள் தொடர்பு அலுவலர்***